



சென்னை தலைமைச் செயலகத்தில், நேற்று (09.01.2026) வனம் மற்றும் கதர் துறை அமைச்சர் ஆர். எஸ். ராஜகண்ணப்பன் வனத் துறை சார்பில் 100 காப்புக் காடுகள் (100 Reserve Forests) குறித்த புத்தகத்தை வெளியிட்டார். உடன் சுற்றுச்சூழல் காலநிலை மாற்றம் மற்றும் வனத்துறை கூடுதல் தலைமைச் செயலாளர் திருமதி சுப்ரியா சாஹு, முதன்மைத் தலைமை வனப்பாதுகாவலர் மற்றும் வனத்துறைத் தலைவர், ஸ்ரீ நிவாஸ் ரெட்டி இ.வட்ட முதன்மைத் தலைமை வனப்பாதுகாவலர் மற்றும் தலைமை வன உயிரினக் காப்பாளர் ராகேஷ் குமார் டோக்ரா. உள்ளிட்டோர் உடனிருந்தனர்.





காஞ்சிபுரம் தெற்கு மாவட்டம் உத்திரமேரூர் சட்டமன்ற தொகுதி உத்திரமேரூர் பேரூராட்சியில் திராவிட சமத்துவ பொங்கல் விழாவை முன்னிட்டு கோலப்போட்டியில் வெற்றி பெற்றவர்களுக்கு மாவட்ட கழக செயலாளர் க. சுந்தர் எம்எல்ஏ. பரிசு வழங்கினார். உடன் ஒன்றிய செயலாளர்.கெ. ஞானசேகரன். பேரூர் செயலாளர் என்.எஸ்.பாரிவள்ளல், பேரூராட்சி மன்ற தலைவர்.பொன். சசிகுமார் துணைத் தலைவர் திருமதி.இளமதி கோவிந்தராஜ் உள்ளிட்ட கழக நிர்வாகிகள் உள்ளாட்சி பிரதிநிதிகள் கலந்து கொண்டனர்.

### மயிலை ஆர்.பாலு தலைமையில் திராவிடப் பொங்கல் விழா !

# சென்னை தென்மேற்கு மாவட்ட வர்த்தகர் அணி சார்பில் நலத்திட்ட உதவிகள் !

## மயிலை த.வேலு– தமிழச்சி தங்கபாண்டியன்– கவிஞர் காசி முத்துமாணிக்கம் வழங்குகின்றனர்!

சென்னை, ஜன.10

சென்னை தென்மேற்கு மாவட்ட தி.மு.க.வர்த்தகர் அணி சார்பில் திராவிடப் பொங்கல் விழா மற்றும் நலத்திட்ட உதவிகள் வழங்கும் நிகழ்ச்சி கழகத் தலைவர், முதல்வர்,துணை முதல்வர் ஆகியோர் ஆணைப்படி இன்று ( 10.1.2026 சனிக்கிழமை ) மாலை 6 மணி அளவில் மயிலாப்பூர் சட்டமன்ற அலுவலகத்தில் நடைபெறுகிறது.

இந்நிகழ்ச்சிக்கு சென்னை தென்மேற்கு மாவட்ட வர்த்தகர் அணி அமைப்பாளர் மயிலை ஆர்.பாலு தலைமை வகிக்கிறார்.

இம் மாபெரும் நிகழ்ச்சியில் சென்னை தென்மேற்கு மாவட்ட கழக செயலாளர் மயிலை த.வேலு எம்.எல்.ஏ, தமிழச்சி தங்கபாண்டியன் எம்.பி, கழக வர்த்தகர் அணி மாநிலச் செயலாளர் கவிஞர் காசி முத்து மாணிக்கம்,ஜெ கருணாநிதி எம்.எல்.ஏ,மயிலை பகுதி கழகச் செயலாளர்கள் எஸ். முரளி,நந்தனம் கி. மதி எம்.சி,கே. ஏழுமலை எம்.சி ஆகியோர் பங்கேற்று பொதுமக்களுக்கு நலத்திட்ட உதவிகள் வழங்குகின்றனர்.

மாவட்ட வர்த்தகர் அணி நிர்வாகிகள் த. சீனிவாசன்,த. மதியழகன்,லயன் சி. எஸ்.நந்தகுமார்,ஆர். கோவிந்தராஜ்,கோ.சு.கருணாநிதி,வே. கனிமொழி, மாயா,ஸ்ரீ கணேஷ்,ஏ.பாஸ்கர், எஸ். வெங்கடேசன்,

பகுதி அமைப்பாளர்கள் கே. முரளி,ஜி.முத்து என்கிற ராஜி,எம். வெங்கடேசன்,எல் சீனிவாசன்,

பகுதி துணை அமைப்பாளர்கள் பி. கோவிந்தன்,டி. ஜெகதீஷ், பசுபதி பிரகலநாதன்,ஆர். சுரேஷ்,செ. வேல்ராஜ், டி.துரைசாமி,கே. கணேஷ் கந்தன்,கே. குமரேசன்,கே. பிரபாகரன்,சுனில் ஜோஷி,ரா. வெங்கட்ராமன்,ஏ. பார்த்திபன்,டி. சிலம்பரசன்,பி.ஜி. சரவணன்,டி ஹரிதாஸ், எஸ்.எம். செல்லப்பா,என் நடராஜன்,ஆர். சிவப்பிரகாஷ்,டி. பிரகாஷ்,

வி. ஆனந்தன்,ஜெ. ஈஸ்வரன்,ஆ.முருகன், பி.மிலிட்டரி செல்வம்,எஸ். தங்கராஜ்,பிரேம்நாத், பைலட் எஸ். ராஜா என்கிற ராஜமாணிக்கம்,ஜெ. சங்கீதா,ஆர்.சுரேஷ், ஜெ.முருகன்,ஏ.டி. மகேந்திரன்,ஆர். ரங்கா,தி.ஆனந்தன்,டி.மணிகண்டன்,ஏ. வடிவேல்,ஜி.ஜெ.பாபு, சைக்கிள் ஜி.ஆர். ஆறுமுகம் உள்ளிட்ட மாநில,மாவட்ட,பகுதி, வட்டக் கழக நிர்வாகிகள், அனைத்து அணிகளின் நிர்வாகிகள்,மகளிர் நிர்வாகிகள்,கழக முன்னோடிகள் விழாவில் பங்கேற்கின்றனர்.

### துரை.ரஞ்சித்குமார் தலைமை! மு.இராசா எம்.சி - கே.கண்ணன் எம்.சி. முன்னிலை!

# கலைஞர் நகர் வடக்கு பகுதி தி.மு.க. சார்பில் விளையாட்டு போட்டிகள் அறுசுவை உணவு - நல உதவிகள்!

## அமைச்சர் மா.சுப்பிரமணியன் - தமிழச்சி தங்கபாண்டியன் - ஏ.எம்.வி.பிரபாகர்ராஜா- க.தனசேகரன் பங்கேற்பு!

சென்னை, ஜன. 10

சென்னை தெற்கு மாவட்டம், விருகம்பாக்கம் சட்டமன்றத் தொகுதி, கலைஞர் நகர் வடக்கு பகுதி தி.மு.க. சார்பில் திராவிட பொங்கல் விழா முன்னிட்டு மாட்டுவண்டி ஊர்வலம், மயிலாட்டம், ஒயிலாட்டம், விளையாட்டு நிகழ்ச்சிகள், அறுசுவை உணவு மற்றும் நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழா நாளை (11.01.2026 ஞாயிற்றுக்கிழமை) காலை 8:00 மணிக்கு, விருகம்பாக்கம் சமூக நலக் கூடத்தில் நடைபெறுகிறது.

கலைஞர் நகர் வடக்கு பகுதிக் கழகப் பொருளாளர் துரை.ரஞ்சித் குமார் தலைமை வகிக்கிறார்.

கலைஞர் நகர் வடக்கு பகுதிக் கழகச் செயலாளர் மு.இராசா எம்.சி, கலைஞர் நகர் தெற்கு பகுதிக் கழகச் செயலாளர் கே.கண்ணன் எம்.சி. ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.

இந்நிகழ்ச்சியில் ரத்னா லோகேஸ்வரன் எம்.சி, வட்டக் கழகச் செயலாளர்கள் மு.கோவிந்தராஜன், வழக்கறிஞர் வீ.ஏ.ராஜா, எஸ். மைக்கேல், பழக்கடை எஸ். பாஸ்கர், தஞ்சை ஆர்.பாபு ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.

இந்நிகழ்ச்சியில் மாவட்டக் கழகச் செயலாளர், அமைச்சர் மா.சுப்பிரமணியன், தென் சென்னை நாடாளுமன்ற உறுப்பினர் தமிழச்சி தங்கபாண்டியன், விருகம்பாக்கம் சட்டமன்ற உறுப்பினர் ஏ.எம்.வி.பிரபாகர்ராஜா, கணக்கு நிலைக் குழுத் தலைவர் க.தனசேகரன், துணை மேயர் மு.மகேஷ்குமார், சட்டமன்ற உறுப்பினர்கள் ச.அரவிந்த் ரமேஷ், காரம்பாக்கம் க.கணபதி, மாநில வர்த்தக அணிச் செயலாளர் காசி முத்துமாணிக்கம், மண்டலக் குழுத் தலைவர் எம். கிருஷ்ணமூர்த்தி உள்ளிட்டோர் பங்கேற்று சிறப்பிக்கின்றனர்.

மேலும் நிகழ்வில் எஸ். டி.தங்கராசன், உ.துரைராஜ், பி.எஸ்.முருகேசன், வாசுகி பாண்டியன், மாமன்ற உறுப்பினர் பொன்.வர.லோகு, நிளவரசி துரைராஜ், தலைமை கழக பேச்சாளர் சென்னை அரங்கநாதன், ஆலந்தூர் மலர்வண்ணன், மாவட்ட அமைப்பாளர்கள் சசிகுமார், கனிமொழி தனசேகரன், நிஷா சையத் உள்ளிட்டோர் பங்கேற்ற சிறப்பிக்கின்றனர்.

மேலும் எஸ்.கமலக்கண்ணன், எஸ்.விஸ்வநாதன், கா.இளங்கோவன், சுபா. முத்துவேல், எஸ்.அர்ஜுனன், விஜயலட்சுமி, அபுபக்கர், செ.ஜெயக்குமார், புல்லட் முருகன், டி.எஸ்.பி. தென்னரசு, என்.எஸ். கோபி, பி.சார்லஸ், கே. ஜி.பாபு, டி.பி.சிபி, எம்.எம். சுரேஷ், ஐ.சி.ஐ.சி.ஐ. செல்வம், ஆர்.வெங்கடேஸ்வரன் வரவேற்புரை ஆற்றுகின்றனர்.

இந்நிகழ்வில் பகுதிக் கழக நிர்வாகிகள் சா.நாகராஜன், வாட்டர் எஸ்.விஜயகுமார் ஆகியோர் நன்றி கூறுகின்றனர்.

### மு.இ.ஏழுமலை தலைமை! நந்தனம், கி .மதி எம்.சி, முன்னிலை!

# 123 வது வட்டத்திற்குட்பட்ட கழக நிர்வாகிகளுக்கு பொங்கல் பரிசு!

## மயிலை த.வேலு எம்.எல்.ஏ. வழங்குகிறார்!

சென்னை, ஜன. 10-

மு.இ.ஏழுமலை தலைமையில் நந்தனம். கி .மதி எம்.சி. முன்னிலையில் திராவிட பொங்கல் விழா மயிலாப்பூர் சட்டமன்றத் தொகுதி முழுவதும் விழா நடத்திட. சென்னை தென்மேற்கு மாவட்ட செயலாளர். மயிலாப்பூர் சட்டமன்ற உறுப்பினர் மயிலை த.வேலு அறிவுறுத்தலின்படி மயிலை மேற்கு பகுதி செயலாளர் நந்தனம் கி.மதி எம்.சி. வழிகாட்டுதலில் 123 வது வட்டக் கழகத்திற்கு உட்பட்ட கழக நிர்வாகிகள் பாக BLA2 பொறுப்பாளர்கள் மற்றும் பாக BLC உறுப்பினர்களுக்கு சமத்துவ பொங்கலிட்டு பொங்கல் பரிசு மற்றும் நலத்திட்ட உதவிகள் வழங்கிடும் விழா வருகின்ற 11/ 01/2026 ஞாயிறு அன்று காலை 10 மணி அளவில் கவிஞர் பாரதிதாசன் சாலையில் உள்ள சமூக நலக்கூடத்தில் நடைபெற இருப்பதால்

இக்கூட்டத்திற்கு வருகை தர இருக்கும் நமது தென்மேற்கு மாவட்ட செயலாளர் பகுதி கழக செயலாளர். மேற்கு கிழக்கு மற்றும் மாநில மாவட்ட பகுதி கழக வட்டக் கழக நிர்வாகிகள் அனைத்து அணிகளின் அமைப்பாளர்கள் துணை அமைப்பாளர்கள் மகளிர் அணி நிர்வாகிகள் கழகத்தின் மூத்த முன்னோடிகள் அனைவரும் தவறாமல் கலந்து கொண்டு விழாவை சிறப்பிக்குமாறு அன்போடு வட்ட கழகத்தின் சார்பாக கேட்டுக்கொள்கிறேன்.

வட்ட செயலாளர் மு.இ. ஏழுமலை கேட்டுக் கொண்டுள்ளார்.

### முதல்வர் மு.க.ஸ்டாலின் பிறந்தநாளையொட்டி எழும்பூர் வடக்கு பகுதியில்

# “அன்னம் தரும் அமுதகரம்” - 325வது நாள்!

## அமைச்சர் பி.டி.ஆர். பழனிவேல் தியாகராஜன் உணவு வழங்குகிறார்!

சென்னை, ஜன.10-

முதலமைச்சர் அவர்களின் 72வது பிறந்த நாளை முன்னிட்டு சென்னை கிழக்கு மாவட்ட திமுக சார்பில், 2025 பிப்ரவரி 20ஆம் தேதி முதல், 2026 பிப்ரவரி 19ஆம் தேதி வரையிலான 365 நாட்களும், நாள் ஒன்றுக்கு 1000 நபர்களுக்கு காலை உணவு வழங்கும் சிறப்புமிகு “அன்னம் தரும் அமுதக்கரங்கள்” மாபெரும் திட்டத்தின் 325ஆம் நாளான - கழகத்தலைவர் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் இனிய பிறந்த நாளை முன்னிட்டு இன்று (10.01.2026), எழும்பூர் தொகுதி: 1) எழும்பூர் வடக்கு பகுதி: வட்டம் 78அ அங்காளம்மன் கோவில் தெரு சூளை, 2) 77அ வட்டம் சிவராஜபுரம் புளியந்தோப்பு ஆகிய பகுதிகளில் இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு முன்னிலையில் பகுதி செயலாளர் சொ.வேலு தலைமையில் தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் டிஜிட்டல் சேவை துறை அமைச்சர் பி.டி. ஆர்.பழனிவேல் தியாகராஜன் அவர்கள் கலந்து கொண்டு காலை உணவு வழங்கி சிறப்புரையாற்றுகிறார்.

இந்நிகழ்ச்சியில் பெருநகர சென்னை மேயர் பிரியாராஜன், வி.சுதாகர், சொ.வேலு, கோ. ஏகப்பன், கே.எஸ்.ரவிச்சந்திரன், தமிழன்பிரசன்னா, புனிதவதி எத்திராசன், கே.எஸ்.எம். நாதன், கோ.மணி, ஜி. தாமோதரன், பி.எம். யாழினி, ராஜேஸ்வரிஸ்ரீதர், பரிதிஇளம்சுருதி, எழும்பூர் தெற்கு/ வடக்கு வட்ட கழக செயலாளர்கள்: வி.விஜயகுமார், ஆர்.பாபு, டால்பின் எஸ்.அரிகிருஷ்ணன், இ.மொய்தீன், வான்மதி கதிரவன், எல். சுந்தர்ராஜன், தி.தயாளன், வி.அபாய், சு. மனோகர், ந.பாலு, ஆர். எம்.ரங்கநாதன், சி.சேகர், ஒருங்கிணைப்பாளர்கள்: சொ.வேலு, எஸ்.முரளி, பெரம்பூர் ஆர்.ராஜன், கே.ஆர்.அபரஞ்சி, அசோக் ஜெயின், பி.விஜயகுமார், ம.அசோக்குமார், L.சம்பத்குமார், க.பா. பிரதீப்குமார் மற்றும் கழக நிர்வாகிகள் முன்னோடிகள் கலந்து கொண்டு சிறப்பிக்கின்றனர்.

# இது ஆனந்த பொங்கல்...



புடவை,வேஷ்டி. பச்சரிசி வெல்லம், முழு கரும்பு, மூன்றாயிரம் ரொக்க பணம், என கை நிறைய பெற்று செல்வோரின் ஆனந்த சிரிப்பை காண கண் கோடி வேண்டும்*

இது "போக்கிரி" பொங்கல் அல்ல... இது ஆனந்த பொங்கல்...





பல்லாவரம் சட்டமன்றத் தொகுதி பொழிச்சலூர் ஊராட்சியில் இ.கருணாநிதி எம்.எல்.ஏ. தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து ரூபாய் 13 லட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்ட புதிய நியாய விலை கடை கட்டடத்தை திறந்து வைத்து பொது மக்களுக்கு பொங்கல் தொகுப்பு ரொக்கமாக ரூபாய் வழங்கி விற்பனையை தொடங்கி வைத்தார் அப்பொழுது கூட்டுறவு துறை கண்காணிப்பாளர் நிஷா தொ.மு.ச இரா.பொன்ராம் பொழிச்சலூர் ஊராட்சி மன்ற தலைவர் வனஜா தயாளன் துணைத் தலைவர் ஜோசப் ஒன்றிய துணைச் செயலாளர் செல்வராஜ் ஊராட்சி மன்ற உறுப்பினர்கள் ஊராட்சி கழக நிர்வாகிகள் ஆகியோர் உடன் இருந்தனர்.